[2013 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தி கேட்டுக் கொண்டதற்கு இணங்க, மீண்டும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, நிதி நிலைமைக்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 161, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

161—

மருத்துவமனை உபகரணங்கள்

***13521—திரு. சு. ரவி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் எக்ஸ்ரே, இ.சி.ஜி., ஸ்கேன் பிரிவுகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் எக்ஸ்ரே, இ.சி.ஜி., ஸ்கேன் போன்ற பிரிவுகளை அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் இரண்டு மருத்துவ வகை மருந்தகமாகும். அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் இன்றைய நிலவரப்படி 10,256 காப்பீட்டாளர்கள் பயன்பெற்று வருகின்றனர். நாள் ஒன்றுக்கு சராசரியாக 155 புறநோயாளிகள் மருத்துவச் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். உள்நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும்

2013 ஏப்ரல் 5]

தொழிலாளர்கள் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் மட்டும் எக்ஸ்ரே, இ.சி.ஜி., ஸ்கேன் போன்ற பிரிவுகளை அமைக்க இயலும். அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் புறநோயாளிகளுக்கு மட்டுமே சிகிச்சை அளிப்பதற்கு இயங்கி வருகின்றது. எனவே, இதில், எக்ஸ்ரே, இ.சி.ஜி., ஸ்கேன் போன்ற பிரிவுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்டைய காலச் சரித்திரத்தில் காடுகளையும், மேடுகளையும் பண்படுத்தி, பாதை அமைத்து பேறுபெற்றவன் அசோக சக்கரவர்த்தி. நவீன காலச் சரித்திரத்திலே நாடு பொருளாதார வளர்ச்சி பெற்றிட சாலைகள் அவசியம் என 200 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே நான்கு வழிச் சாலை எனது அரக்கோணம் தொகுதிவரை அமைக்க ஆணை பிறப்பித்த நவீன வரலாற்று நாயகியாம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) புனித பொற்பாதங்களை வணங்கி, எனது தொகுதி மக்களின் சார்பிலும், எனது சார்பிலும் கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

(முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்து விரல்களையும் மூலதனமாக்கி, சத்தான வளர்ச்சிக்கு வித்தாகி, வளமான வாழ்வுக்கு காரணமாகி, வசதியில்லா வாழும் தொழிலாளர்களின் வாட்டத்தைப் போக்க, தொலைநோக்குப் பார்வை கொண்டு தொழிலாளர்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தை நம்பி தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சுமார் 50,000 பேர் உள்ளார்கள். நாள்தோறும் 200-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சிகிச்சைக்காக செல்கிறார்கள். தொழிற்சாலைகளில் பணிபுரியும்போது தொழிலாளர்களுக்கு மார்பு வலி ஏற்பட்டாலோ, உடல்நலக்

குறைவு ஏற்பட்டாலோ, விபத்து, காயம் ஏற்பட்டாலோ மருந்தகத்திற்குச் செல்கின்றபோது முதல் பரிசோதனை, preliminary examination, செய்து அவர்களுக்கு உரிய சிசிக்சை மேற்கொள்ள இ.சி.ஜி., எக்ஸ்ரே, ஸ்கேன் போன்ற கருவிகள் அந்த மருந்தகத்திலே இல்லாத காரணத்தினால், தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் பல்வேறு சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கு முதல் பரிசோதனை செய்வதற்கு இ.சி.ஜி., எகஸ்ரே, ஸ்கேன் போன்ற கருவிகளை அந்த மருந்தகத்திற்கு வழங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் இரண்டு மருத்துவ வகை மருந்தகமாகும். இந்தத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் புறநோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக மட்டும் இயங்குகின்றது. உள்நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் மட்டுமே எக்ஸ்ரே, இ.சி.ஜி., ஸ்கேன் போன்ற பிரிவுகள் இயக்க இயலும். எனவே, மேற்கண்ட வசதிகள் அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் இல்லை. அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் பதிவு செய்து சிகிச்சை பெற்று வரும் தொழிலாளர்களுக்கு எக்ஸ்ரே, இ.சி.ஜி. பரிசோதனை செய்ய நேர்ந்தால், மருத்துவர்களின் பரிந்துரையை ஏற்று, அரக்கோணம் பொது மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்துகொள்கிறார்கள். ஒரு மாதத்திற்கு சுமார் 50 முதல் 60 பிணியாளர்கள் இவ்வாறு அரக்கோணம் பொது மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றார்கள்.

அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்கும், பொது மருத்துவமனைக்கும் இடையே சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரமே உள்ளது. மேலும், சிறப்புப் பரிசோதனைக்காக வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை அருகில் குவாலிட்டி ஸ்கேன்ஸ் மற்றும் டாக்டர்ஸ் லேப் என்ற தனியார் மருத்துவமனைகளிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் 9-11-2012 அன்று மாண்புமிகு இதய

2013 ஏப்ரல் 5]

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற பொற்கால ஆட்சியிலேதான் செய்யப்பட்டுள்ளது. பிணியாளர்கள் அத்தனியார் மருத்துவமனைக்கும் அனுப்பப்படுகின்றார்கள். அதுமட்டுமின்றி, சிறப்புப் பரிசோதனைக்கென சென்னையிலுள்ள அயனாவரம் மருத்துவமனைக்கும் மாதத்தில் 30 முதல் 40 வரை பிணியாளர்கள் அனுப்பப்படுகின்றார்கள். இதற்கான போக்குவரத்துச் செலவு மற்றும் முழுச் செலவையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய நலன் கருதி மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்ற பதிலை வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் தொழிலாளர்களின் தோழன் சார்பிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 162, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

162—

மாணவர் விடுதி

***25012—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—